
தொழில் சார் கல்வி

# கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்





120102

ஆரம்ப ஆசிரியர் கல்விப் பாடநெறி

**செயற்குழு** எச். ஜி. சி. ஏ. ரி. ஜயசேகரா
கலாநிதி. செல்வி கே. எஸ். இராஜரட்னம்
சி. புலேந்திரன்
வை. எல். ஏ. வஹாப்
கே. கிருஷ்ணபிள்ளை
கே. ரி. கனகரத்தினம்
வீ. இராசையா
ஏ. சிவராஜா
ஜி. எச். மகிந்தரத்தின

# கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும்

தொலைக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

| தொழில் சார் கல்வி | 1201 |
|---|---|
| கல்வியின் நோக்கங்களும் குறிக்கோள்களும் | 120102 |

உள்ளடக்கம் பக்கம்


0.0 அறிமுகம் .................... 03

1.0 குறிக்கோள் .................... 04

2.0 முற் சோதனை .................... 04

பகுதி I.

3.0 நோக்கங்களும் குறிக்கோள்களும் .................... 05

4.0 கல்வியின் நோக்கங்களைத் தீர்மானித்தல் .................... 06

4.1 தத்துவக் கருத்துக்கள் .................... 07

பகுதி II.

5.0 இலங்கையிற் கல்வியின் நோக்கங்கள் .................... 11

பகுதி III.

6.0 பிறநாடுகளின் கல்வியின் நோக்கங்கள் .................... 17

6.1 ஐக்கிய அமெரிக்க நாட்டின் கல்வி நோக்கங்கள் .................... 18

6.2 ஐக்கிய இராச்சியத்தின் கல்வி நோக்கங்கள் .................... 20

6.3 சோவியத் ருஷியாவின் கல்வி நோக்கங்கள் .................... 21

6.4 இந்தியாவின் கல்வியின் நோக்கங்கள் .................... 22

7.0 சுருக்கம் .................... 24

8.0 பிற் சோதனை .................... 24

9.0 ஒப்படை .................... 25

10.0 கலைச் சொல் விளக்கம் .................... 25

11.0 விடைகள் .................... 26



© 1990—தேசியக் கல்வி நிறுவகம்,



பதிப்பு 1:2

# 0.0 அறிமுகம்

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடத் திட்டத்தில் தொழில் சார் கல்விக்குரிய இந்த மொடியூல் கல்வியின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் ஆராய்கிறது.

நீங்கள் ஒரு காரியத்தைச் செய்து முடிக்க எத்தனிக்கின்றீர்களென வைத்துக் கொள்ளுங்கள். இந்த வேலையைத் திருப்திகரமாகச் செய்து முடிப்பதற்கு ஒரு திட்டத்தைத் தயாரித்துக் கொள்ள வேண்டியதவசியம்.. இத்திட்டத்தை நிறை வேற்றுவதற்காக என்ன என்ன செயற்பாடுகளைச் செய்ய வேண்டுமெனத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். இத்தீர்மானங்களே இத்திட்டத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களுமாகின்றன.

நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நேர காலத்தோடு ஏன் நாம் தீர்மானிக்க வேண்டும் ?

கலாநிதி "றெபெட் மேகர்" இது பற்றிக் கீழ்வரும் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

"நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்தை நன்ருக அறியாவிட்டால் நீங்கள் வேறு இடத்தைச் சென்றடைய நேரிடலாம். அது மட்டுமன்றி நீங்கள் வேறு இடத்தை அடைந்து விட்டீர்களென்பதையே அறியாமலும் இருக்கக் கூடும்."



எந்தக் காரியத்தையும் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கு முன் அதற்குரிய நோக்கங்களையும் குறிக்கோள்களையும் திட்டவட்டமாகத் தீர்மானிக்க வேண்டும். இதையே மேலே உள்ள கூற்றுத் தெளிவாக விளக்குகிறது.

கல்வி ஒரு நாட்டின் வருங்கால சமுதாயத்தை உருவாக்குமொரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. ஆகவே, நாட்டின் கல்வி முறை ஒழுங்கான முறையில் திட்டமிடப்பட வேண்டியது அவசியமாகும்.

கல்வி முறையினைத் திட்டமிடும்பொழுது அதி முக்கியமாகக் கருதப்படும் நோக்கங்களையும் குறிக் கோள்களையும் உற்று நோக்குவதே இந்த மொடியூலின் இலக்காகும். கீழ்வரும் விடயங்களை நீங்கள் இப்பொழுது கற்கப் போகின்றீர்கள்.

- நோக்கங்களும், குறிக் கோள்களுமென்றுலென்ன ?
- கல்வியின் நோக்கம் எவ்வாறு தீர்மானிக்கப்படுகின்றது ?
- இலங்கை உட்பட, உலகிலுள்ள சில நாடுகளின் கல்வியின் நோக்கங்கள் எவை ?

மேலே உள்ள விடயங்களைத் தெளிவாக விளங்கிக் கொள்வதற்கு உங்களுக்குச் செயற்பாடும் செவ்வை பார்த்தலிலக் கொடுக்கப்பட்டுள்ளன.

# 1.0 குறிக்கோள்கள்

இந்த மொடியூலைக் கற்று முடித்த பின் கீழ்வரும் குறிக் கோள்களை நீங்கள் அடைந்திருக்க வேண்டும்.

★ கல்வியின் நோக்கங்களினதும் குறிக்கோள்களினதும் தன்மைகளை அறிந்து கொள்ளுதல்.

★ கல்வியின் போக்கினையறிந்து கொள்வதற்காகக் கல்வி யின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும், விசேட குறிக் கோள்களையும் விளங்கிக் கொள்வதோடு, ஒவ்வொரு குறிக் கோளையும் தனித் தனியாக இனங்காணும் திறமையையும் பெற்றுக் கொள்ளுதல்.

★ இலங்கையினதும் ஏனைய சில நாடுகளினதும் கல்வி நோக் கங்களையும் குறிக் கோள்களையும் அறிந்த பின் சமுதாயத் தின் தேவைகளுக்கேற்பக் கல்வியின் நோக்கங்கள் காலத் துக்குக் காலம் நாட்டுக்கு நாடு வேறுபடுமென்பதை அறிந்து கொள்ளல்.

★ பல்வேறு கல்வி முறைகளில் காணப்படும் கல்வியின் நோக் கங்களையும் குறிக் கோள்களையும் ஆராயும் திறமையையும் விருப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்ளல்.

# 2.0 முற்சோதனை

சரியான விடையை அறிய இம் மொடியூலின் 11.0 ப் பாருங்கள் எதாவதொரு செயலில் வெற்றி பெற முதலில் அச்செயலின் நோக்கங்கள் பற்றிய அறிவு இருத்தல் வேண்டும் என்பது உங்களுக்குத் தற்போது விளங்கி யிருக்கும்.

கல்வியின் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பற்றி அறிவதற்கு முன் அவற்றுடன் தொடர்பான இரு வினாக்களை உங்கள் முன் வைப்பது பொருத்தமானது. கீழே வினாக்களுக்குத் தரப்பட்டுள்ள விடை களிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து நேரே யுள்ள கூட்டில் ( ✓ ) என அடையாளமிட்டுக் காட்டுக.

1. கொழும்புக்கு நீங்கள் மேற் கொண்ட பிரயாணம் வெற்றிகர மாக முடிந்ததா? இவ்வினாவுக்கு விடையளிக்க மிகப் பிரயோசன மாக இருப்பது.

   1. கொழும்புக்கு எப்படிச் சென்றீர்களென அறிதல். ☐
   2. கொழும்புக்குச் செல்வதால் எதிர்பார்ப்பது என்ன என அறிதல். ☐
   3. கொழும்புக்குச் சென்றடையும் நேரத்தையறிதல். ☐
   4. கொழும்புக்கு நீங்கள் செல்வதால் அடையும் ஏனைய பலா பலன்கள் எவையென அறிதல். ☐

2. தற்போது இலங்கையில் நடைமுறையிலுள்ள கல்வி முறை திருப் திகரமாக அமைந்துள்ளதா? இக்கேள்விக்கு விடையளிக்க மிகப் பிரயோசனமாக இருப்பது,

   1. க. பொ. த. சா. பரீட்சையில் ஒவ்வொரு வருடமும் சித்தி அடையும் தொகையைத் தெரிந்திருத்தல். ☐
   2. வருடம்தோறும் பல்கலைக் கழகத்துக்கு அனுமதிக் கப்படும் தொகையைத் தெரிந்திருத்தல். ☐

3. இலங்கையிலுள்ள தற்காலக் கல்வி முறையினால் பெற்றுக் கொள்ளக் கூடியவை எவையெனத் தெரிந் திருத்தல். ☐

4. இடையில் பாடசாலையிலிருந்து விலகுவோர் தொகை யைத் தெரிந்திருத்தல். ☐

**பகுதி I**

# 3.0 நோக்கங்களும் குறிக்கோள்களும்

கற்பித்தல் செயற்பாடுகளுக்கூடாகக் கல்வியின் நோக்கங்களையும் குறிக் கோள்களையும் அடைவதற்கான அம்சங்கள் மூன்று நிலைகளில் விளக் கப்படுகின்றன.

**முதல் நிலை - நோக்கங்கள்**

நீண்ட காலத்தின் பின் எதிர்பார்க்கப்படும் பயன்களே நோக்கங்களா கும். இதற்கெடுத்துக் காட்டாக நாட்டில் நற்பிரஜைகள் உருவாக் கப்படுவதைக் கூறலாம்.. இந்த மொடியூலில் 4.0 இல் நோக்கங்கள் விரிவாக விளக்கப்பட்டுள்ளன.

**இரண்டாம் நிலை - குறிக்கோள்கள்**

கல்வி முறையினாலடையக் கூடிய குறுகிய காலப் பயன்களே குறிக் கோள்களெனப்படும். ஏதாவதொரு பாடத்தினைக் கற்பிப்பதனூடா கக் குறிக்கோள்களை அடைய முடியுமென எதிர்பார்க்கப்படுகின்றது இவ்வாறான குறிக்கோள்கள் பல நிறைவேறும் பொழுது நீண்ட காலப் போக்கில் கல்வி நோக்கங்களை அடைய முடியும்.

சுகாதார விஞ்ஞானம் கற்பிப்பதன் குறிக்கோள் பிள்ளைகளிடம் சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதேயாகும். இதன் பொருத்தமான நோக்கம் சுக வாழ்க்கைக்குப் பிள்ளைகளை ஆயத்தப் படுத்தலாகும்.

**மூன்றும் நிலை - விசேட குறிக்கோள்கள்**

ஆசிரியர்கள் தினமும் கற்பிக்கும் பாடங்களின் முடிவில் மாணவர் களிடையே எதிர்பார்க்கும் உறுதியான மாற்றங்களை விசேட குறிக் கோள்களாகக் கொள்ளலாம்.



தசம பின்னத்தில் கூட்டல் செய்கை பற்றிக் கற்பித்த பின், மாண வர்கள் தசம பின்னக் கூட்டலில் விளக்கம் பெற்றிருப்பர். இது விசேட குறிக் கோள்கள் நிறைவேறுவதைக் குறிக்கிறது. இவ்வாறு பிள்ளைகளிடையே ஏற்படும் உறுதியான அளவிடக் கூடிய நடத்தை மாற்றத்தைக் குறிக்கோள் எனக் கூறலாம்.

ஆசிரியரொருவர் பாடத்தைத் திட்டமிடும்போது மாணவர்களிடமெதிர் பார்க்கும் நடத்தை மாற்றம் "குறிக்கோள்கள்" என்ற தலைப்பில் எழுத்துருவில் காட்டப்பட வேண்டும். கல்வி உளவியலாளரான பெஞ்சமின் புளூம் என்பவர் ஒழுங்கான முறையில் குறிக்கோள்கள் தயாரிக்கும் விதத்தைத் தெளிவாக விளக்கியுள்ளார். அதை மூன்று ஆட்சிகளுக்குள் ஆராய்ந்துள்ளார். அவையாவன;

- அறிதல் ஆட்சி. (அறிவு.)
- எழுச்சி ஆட்சி. (மனப் பாங்கு.)
- உள, இயக்க ஆட்சி. (திறன்.) என்பன.

மேலே தரப்பட்டுள்ள பாடத்தின் குறிக்கோள்கள். "பாடத்தைத் திட்டமிடுதல்" பற்றிய மொடியூலில் விரிவாகக் காட்டப் பட்டுள்ளன.

### செவ்வைபார்த்தல் 1

கல்வியின் நோக்கங்கள் குறிக் கோள்கள் பற்றி நீங்கள் பெற்ற விளக்கத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இச்செவ்வை பார்த்தலைச் செய்யுங்கள்.

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் வாசித்து அது கல்வியின் நோக்கமானால் 1 என்ற இலக்கத்தையும், அது கல்வியின் குறிக்கோளானால் 2 என்ற இலக்கத்தையும், விசேடகுறிக்கோளானால் 3 என்ற இலக்கத்தையும் பொருத்தமான கூட்டில் எழுதுங்கள்.

1. "ற" எழுத்தைச் சரியான எழுதும் திறனைப் பெற்றுக் கொடுத்தல். ☐
2. நல்லொழுக்கங்களை வளர்த்தல். ☐
3. அன்றாட வாழ்க்கையில் பணத்தைக் கையாள்வதற்கான பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல். ☐
4. நாட்டுப்பாடலுக்கு மதிப்பளித்து நயக்கும் திறனைப் பெற்றுக் கொடுத்தல். ☐
5. ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழிப்பதற்கான திறனைப் பெற்றுக் கொடுத்தல். ☐
6. "நீ" என்ற ஒருமைப் பெயர்ச் சொல்லை "நீங்கள்" என்ற பன்மைப் பெயர்ச் சொல்லாகப் பயன்படுத்துவது பற்றி மாண வர்கள் அறிந்து கொள்ள உதவுதல். ☐
7. பல்லின் தொகுதியும் அதன் அமைப்பும் பற்றி மாண வர்கள் விளங்கிக் கொள்ள உதவுதல். ☐
8. நோய்களிலிருந்து பாதுகாப்புத் தேடுவதற்கு வழி காட்டுதல். ☐
9. நற்பிரசைகளை உருவாக்குதல். ☐
10. இலையினமைப்பையும் அதன் தொழிற்பாடுகளையும் பற்றிக் கற்றுக் கொடுத்தல். ☐

இந்த மொடியூலில் இல. 11.0 இல் விடைகள் உள்ளன. அவற் றுடன் உங்கள் விடைகளை ஒப் பிட்டுப் பாருங்கள்.

## 4.0 கல்வியின் நோக்கங்களைத் தீர்மானித்தல்

நோக்கங்களையும் குறிக்கோள்களையும் பற்றிய விளக்கம் மேலே தரப் பட்டுள்ளது. கல்வியினூடாக நிறை வேற்றப்பட வேண்டிய நோக்கங் களும் குறிக்கோள்களும் பல உள. ஏதாவதொரு நாட்டின் கல்வி யின் நோக்கங்களைத் தீர்மானிக்கும் பொழுது பல்வேறு காரணிகளைக் கவனத்திற் கொள்ள வேண்டும். சில முக்கிய காரணிகள் பின் வருமாறு :



★ ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவக் கருத்துக்களுக்கு அமைவாகக் கல்வி ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

★ நாடு ஏற்றுக் கொள்ளும் அரசியல், பொருளாதார, அற நெறிகளுக்கேற்பக் கல்வி அமைந்திருக்க வேண்டும்.

★ மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார முன்னேற்றத்துக்கு வழி வகுப்பதோடு-கல்வியில் தனி மனித வளர்ச்சிக்கும் சந்தாப்பம் வழங்கப்பட வேண்டும்.

★ சமுதாயத்திற் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கல்வி வழி வகுக்க வேண்டும்.

★ சமுதாயத்தின் தேவைகளைக் கருத்தில் கொண்டு கல்வியின் நோக்கம் வரையறுக்கப்படுகின்றது. இவ்வாறு வரையறுக்கப்படும் கல்வியின் நோக்கங்கள் பல குறிக்கோள்களைக் கொண்டுள்ளன. இந்நோக்கங்களும், குறிக்கோள்களும் ஒன்றுடனொன்று பொருந்தும் வகையில் அமைதல் வேண்டும்.

★ சமுதாயத்தின் அவசரத் தேவைகளுக்காக சில நோக்கங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயற்படுதல் வேண்டும்.

★ கல்வியின் நோக்கத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் தீர்மானிக்கும்பொழுது எதிர்காலத்தில் எழக் கூடிய தேவைகளையும் பிரச்சனைகளையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

★ நாட்டிற் பெற்றுக் கொள்ளக் கூடிய வளங்களால் (மூலதனம் பொருட்கள், மக்கள் வளம்) நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதான நிலையில் நோக்கங்கள் அமைய வேண்டும். நாட்டிற்குப் பொருத்தமற்ற நோக்கங்களும், குறிக்கோள்களும் எவ்வித பயனையும் தராது.

நாங்கள் எல்லாக் காரணிகளையும் விரிவாக ஆராய்வதற்கு இங்கு சந்தர்ப்பம் மிகக் குறைவாக இருக்கிறது.

கல்வியின் நோக்கங்கள் பற்றிய தத்துவக் கருத்துக்களை இப்பொழுது கற்போம்.

## 4.1 தத்துவக் கருத்துக்கள்

கீழ்வரும் பந்திகளை வாசிப்பதன் மூலம் கல்வியின் நோக்கங்களும், குறிக்கோள்களும் பற்றி மூன்று தத்துவஞானிகள் கூறிய கருத்துக்களை நீங்கள் இப்பொழுது கற்பீர்கள். இலண்டன் பல்கலைக் கழகத்துக் கல்வித் தத்துவப் பேராசிரியரான ஆர். எஸ். பிற்றுஸ் எனபவர் வெளியிட்ட கருத்துக்கள் பின்வருவன.

"மக்களுக்குக் கல்வியைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் எதிர்பார்ப்பது ஒரு அளவான அறிவையும் விளக்கத்தையும் கொண்ட விழுமியங்களுடாக உள வளர்ச்சியை ஏற்படுத்தலாகும்".

"கல்வி சம்பந்தமான எந்தச் சிபார்சுகளும்: மற்றவர்களுக்குச் சில நன்மைகளை வழங்க வேண்டுமென்ற தீர்மானங்களை உள்ளடக்கிதாக இருக்க வேண்டும்".

"கலாச்சாரததால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பயனுள்ள விடயங்களை சமூகத்துக்குப் பெற்றுக் கொடுத்தலே கல்வி"..

கல்வி என்பது பயனுள்ள சிந்தனைப் போக்குக்கு அல்லது செயற்பாட்டுக்குப் பயிற்சி அளிப்பதாகும். அத்துடன் கீழ்வரும் மூன்று அம்சங்களையும் உள்ளடக்கியதாகக் கல்வி அமைய வேண்டும். அவ்வம்சங்களாவன :

★ கல்வியானது அதனோடு சம்பந்தப்பட்டவர்களுக்கு பயனுள்ளவை எவையெனக் கருதப்பட்டனவோ அவற்றை வழங்குவதேயாகும்.

★ கல்வியானது பாரம்பரிய அறிவை மாத்திரம் உள்ளடக்காது தொழிற்பாடுகளுடன் கூடிய எதிர்காலத்தை உய்த்துணரும் அறிவையும் கொண்டிருக்கும்.

★ தன்னிச்சையாகவும் ஆர்வத்துடனும் தொழிற்படாத சில செயற்பாட்டு முறைகளைக் கல்வி உள்ளடக்காது.

"தனிப்பட்டவர்களை மேம்படுத்துவதற்குரிய தகுதியான பல செயற்பாட்டு முறைகளைத் தெரிவு செய்து கொள்ளலும் கல்வியின் பாற்படும்."

சிறந்த வாழ்வும் - நற்பண்புகளும் உடைய ஒருவரை உருவாக்குவதற்குத் தேவையான நெறி முறைகளைத் தெரிவு செய்து கொள்வது கல்வியுடன் சம்பந்தப்பட்டதாகும்.

"கல்வியின் நோக்கங்கள் பல இருந்தாலும் ஒருவர் கல்வியைப்பெற்றுள்ளமையை அறிவதற்கு அவரிடம் நான்கு தன்மைகள் காணப்பட வேண்டும். அவையாவன:

★ பயனுள்ள தொழிற்பாடுகளிலுள்ள உள்ளார்ந்த முக்கியத்துவத்தை அறிந்து, அவற்றில் சேவை மனப்பான்மையுடன் ஈடுபடுதல்.

★ ஆழ்ந்த அறிவு விருத்தியை ஏற்படுத்தல்.

★ சிறப்புத் தேர்ச்சியினால் குறுகிய மனப்பான்மைகளைத் தவிர்த்தல்.

★ கற்றதினால் ஒருவரின் நோக்கு (திருஷ்டி) மாற்றமடைதல்.

கல்வியியலாளர்கள் கல்வியின் நோக்கங்களைப் பற்றிக் கூறிய கருத்துக்கள் அவரவர் கல்வியின் தேவைகளைப் பற்றிக் கொண்டுள்ள முன்னுரிமைகளை விளக்குபவனவாக அமைந்துள்ளன.

கல்வி வழங்குபவர்கள் ஒவ்வொரு கால சட்டத்திலும் பல்வேறு துறைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளமையால், பல்வேறு தகைமைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. வழங்க வேண்டிய கல்வியின் தன்மைக்கு ஏற்பக் கல்வியின் நோக்கங்கள் உருவாகின்றன.

பேராசிரியர் டி. கே. ஓகொணர் அவர்களால் தரப்பட்ட கல்வியின் நோக்கங்கள் ஐந்தினை இபபொழுது உங்களுக்கு நான் கூற விரும்புகின்றேன். அவையாவன :

★ சமுதாயத்தில் தம் பங்கினை அளிக்கும் பொருட்டும் மேலதிக அறிவினை மீண்டும் விரும்பிப் பெறும் பொருட்டும், ஆண்-பெண் இரு பாலாருக்கும் தேவையான ஆகக் குறைந்த அடிப்படைத் திறனை யாவது அளித்தல்.

★ சுயமாகத் தொழில் செய்து வாழ்க்கை நடாத்துவதற்கு ஆண், பெண் இரு பாலாருக்கும் தொழிற் பயிற்சியை அளித்தல்.

★ அறிவைத் தேடும் ஆர்வத்தையும் விருப்பத்தையும் வளர்த்தல்.

★ விமர்சிக்கும் மனப்பான்மையை விருத்தி செய்தல்.

★ நல்லொழுக்கப் பண்புகளையும் மரபு ரீதியான கலாச்சார நெறி முறைகளையும் மனித இனத்துக்கு அறிமுகப்படுத்தி, அவற்றை மதிக்கும் விதத்தில் பயிற்சி கொடுத்தல்.

இந்தியாவின் தலை சிறந்த தத்துவ ஞானியான கலாநிதி எஸ். இராதாகிருஸ்ணன் அவர்கள் சிறப்பு மிக்க கல்வி அமைப்பின் நோக்கங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென விளக்கியுள்ளார். அவையாவன :

சம நிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.
அறிவையும் ஞானத்தையும் விருத்தி செய்தல்
உள விருத்தியை ஏற்படுத்துதல்.
மனிதனின் ஒழுக்க நற்பண்புகளை விருத்தியடையச் செய்தல்.

## செயற்பாடு 1

பிளேட்டோ, டூயி, மகாத்மா காந்தி, கார்ல்மாக்ஸ் போன்ற பல நாட்டுத் தத்துவ ஞானிகளின் கல்வியின் நோக்கங்கள் பற்றிய பல்வேறு கருத்துக்களை மேலுமறிந்து கொள்ளுதல் மிக முக்கியமானதாகும்.

மேலே குறிப்பிடப்பட்ட தத்துவ ஞானிகளான பேராசிரியர் பீற்றஸ், பேராசிரியர் ஒகொணர், கலாநிதி இராதாகிருஸ்ணன் ஆகிய மூவரினதும் கல்வியின் நோக்கங்களை ஆராய்ந்து பாருங்கள். வசனங்கள் சிறிதாகவோ அல்லது பெரிதாகவோ இருந்தாலும் அவர்கள் அளித்துள்ள விளக்கங்கள் ஒத்த தன்மையுடையனவாக இருப்பதை நீங்கள் அவதானிப்பீர்கள். இம் மூவரினதும் நோக்கங்களைச் சுருக்கமாக உள்ளடக்கிய பட்டியல் ஒன்று தயாரியுங்கள்.

இதற்கு வழி காட்டியாக நோக்கமொன்று இங்கே எழுதப்பட்டுள்ளது. மிகுதியை எழுதிப் பூரணப்படுத்துங்கள்.

நோக்கங்கள் - 1 : 1. அறிவையும் ஞானத்தையும் விருத்தி செய்தல்.

2.

3.

4.

5.

6.

## செவ்வைபார்த்தல் II

விடைகளை மொடியூலின் 11.0ல் காணலாம். உங்களது விடைகளை அதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். 20ற்கு மேற்பட்ட விடைகள் சரியானதாக இருந்தால், மிகத் திருப்தியாகும். குறைவாக இருந்தால் பகுதி - 1 ஐத் திரும்பவும் வாசியுங்கள்.

பகுதி - 01 இல் கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களை

நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். அதற்காகச் செவ்வை பார்த்தல் 02 தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வசனத்திற்கும் எதிராக ஆம்/இல்லை எனவும் தரப்பட்டுள்ளது. இதில் பொருத்தமற்றதை வெட்டி விடுங்கள். இச்சுய மதிப்பீடு உங்களது விளக்கத்தை மதிப்பீடு செய்கின்றது.

அ. நோக்கம், குறிக்கோள், இலக்கு, அடைய வேண்டிய இடம் ஆகிய பதங்கள் யாவும்,

1. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த எண்ணக் கருக்களாகும். ஆம்/இல்லை.

2. இவ்வெண்ணக் கருக்கள் மத்தியில் சிறு சிறு வேறுபாடுகள் காணப்படுகின்றன. ஆம்/இல்லை.

3. இவ்வெண்ணக் கருக்களில் எவ்வித வேறுபாடு களும் இல்லை. ஆம்/இல்லை.

ஆ. கல்வியின் நோக்கங்கள் என நாம் கருதக் கூடியவை :

4. அறிவை விருத்தி செய்தல். ஆம்/இல்லை.

5. கற்றதினாலடைந்துள்ள . விழுமியங்களிலிருந்து திருப்தியடைதல். ஆம்/இல்லை.

6. பயன்தரும் செயற்பாடுகள் மூலம் சரியான விளக் கங்களைப் பெற்றுக் கொள்ளல். ஆம்/இல்லை

7. ஒழுக்க நற் பண்புகளை விருத்தி செய்தல். ஆம்/இல்லை

8. சிறப்புத் தேர்ச்சியினால் குறுகிய மனப்பான்மை ஏற்படாமல் தவிர்த்தல். ஆம்/இல்லை

இ. கல்வியிலாளருக்குக் கல்வியின் நோக்கங்கள் பற்றிய அறிவு இருக்க வேண்டியதன் அவசியம் யாதெனில் :

9. அவர்கள் செய்யும் வேலை மதிப்பீடு செய்வதற்காக. ஆம்/இல்லை.

10. அவர்கள் செய்யும் வேலையில் குறைகளைக் கண்டறிவதற்காக. ஆம்/இல்லை.

11. செய்ய வேண்டிய வேலையை முன்னுரிமைப்படி ஒழுங்கு படுத்துவதற்காக. ஆம்/இல்லை.

12. தங்களுடைய கவனத்தை வேலையில் ஈர்ப்ப தற்காக. ஆம்/இல்லை

13. செய்ய வேண்டிய வேலையின் முன்னுரிமை ஒழுங்கைத் தவிர்ப்பதற்காக. ஆம்/இல்லை.

14. தாம் வேலை செய்யும்போது தேவையற்ற விட யங்களை அகற்றுவதற்காக. ஆம்/இல்லை.

ஈ. கல்வியின் நோக்கங்களாவன :

15. பொது எதிர்பார்ப்புகளாக அமைதல் ஆம்/இல்லை.

16. நீண்டகால எதிர்பார்ப்புகளாக அமைதல். ஆம்/இல்லை.

17. பரந்த எதிர்பார்ப்புகளாக அமைதல். ஆம்/இல்லை.

18. குறிக்கப்பட்ட எதிர்பார்ப்புகளாக அமைதல் ஆம்/இல்லை.

19. தத்துவ அடிப்படையிலான எதிர்பார்ப்புகளான அமைதல். ஆம்/இல்லை.

20. குறுகிய கால எதிர்பார்ப்புகளாக அமைதல. ஆம்/இல்லை.

உ. கல்வியின் நோக்கங்கள் :

21. அவ்வித நாட்டின் அரசியல் தத்துவத்தை ஒன்றிணைத்தல். ஆம்/இல்லை.

22. சமுதாயத்தின் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல். ஆம்/இல்லை.

23. நீண்ட காலப் பிரதி பலனை எதிர்பார்த்து அமைக்கப்பட்டிருத்தல். ஆம்/இல்லை.

24. நாட்டின் வளங்களை மனதிற் கொண்டு அமைக்கப்பட்டிருத்தல். ஆம்/இல்லை

25. நாட்டுக்கு நாடு வேறுபட்டிருத்தல். ஆம்/இல்லை.

பகுதி II

## 5.0 இலங்கையிற் கல்வியின் நோக்கங்கள்

இலங்கையிற் கல்வி முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நீங்கள் கல்வியின் நோக்கங்களை விளங்கிக் கொள்வது அவசியமாகும். இதற்காக நாங்கள் இப்பொழுது இலங்கையிற் கல்வியின் நோக்கங்களைப் பின்வரும் அறிக்கையிலிருந்து ஆராய்ந்து பார்ப்போம்.

★ விசேட கல்வி ஆணைக் குழுவின் அறிக்கை - 1943.

★ ஐந்தாண்டுத் திட்டம் - 1972 — 1976.

★ கல்வி மீளாய்வுக் குழு அறிக்கை - 1979.

★ கல்வி வெள்ளை அறிக்கை - 1981.

4.0 இன் கீழ்க் கொடுக்கப்பட்டுள்ள நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, இவ்வறிக்கையிற் கூறப்பட்ட நோக்கங்கள் அமைந்திருக்கின்றனவா? என உற்று நோக்குங்கள்.

### 5.1 1943 ஆம் ஆண்டில் விசேட கல்வி ஆணைக் குழுவினரால் விதப்புரை செய்யப்பட்ட கல்வியின் நோக்கங்கள்

கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா தலைமையிலான விசேட கல்வி ஆணைக் குழுவின் அறிக்கையில் தரப்பட்ட விடயங்களிலிருந்து அக்காலத்துக் கல்வியின் நோக்கங்கள் தெளிவாக விளங்குகின்றன. (1943 CXXIV அமர்வு அறிக்கை, பக்கம் 14 15)

கல்வியின் பொது நோக்கம் இவ்வுலக வாழ்க்கைக்கு உதவுவதோடு மறுவுலக வாழ்க்கைக்கும் ஆயத்தப்படுத்துவதாகும். இக்கால கட்டத்தில் விசேட நோக்கங்களாக மூன்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.

அவையாவன :

1. உள வளர்ச்சியும், மனக் கட்டுப்பாடும்.


2. நல்லொழுக்கங்களை உள்ளடக்கிய கலாச்சாரம்.

3. திறமைகள்.

நுண்ணறிவு அல்லது ஞான வளர்ச்சியே உள வளர்ச்சியெனப் பொதுவாகக் கருத்தப்படுகின்றது. விரிவாக நோக்கும் பொழுது உள சம்பந்தமான ஏனைய துறைகளினது விருத்தினையும் உள வளர்ச்சியினால் ஏற்பட்ட முன்னேற்றமே குறுகிய கருத்தில் கலாச்சாரமெனப்படுகிறது. கலாச்சாரத்தை விரிவான முறையில் கருதும் பொழுது எல்லாத் துறைகளிலும் சமூகப்பயனுள்ள நோக்கங்களுக்கேற்ப முடிவுகளை எடுக்கும் திறமையை அது குறிக்கிறது. மேலே கூறிய கருத்தை நோக்கும்போது இது நற்குணவியல்புகளின் வளர்ச்சி என உணர முடிகின்றது. நல் முறையில் பணிபுரியும் தகைமையே திறமையாகும். இதை ஒரு தனி மனிதன் நாட்டின் பிரசை என்ற முறையில் சமுதாயத்துக்காக ஆற்றும் சேவையிலிருந்து அல்லது தனது வாழ்க்கைக்காக மேற் கொள்ளும் தொழிலில் காணும் வெற்றியிலிருந்து அளவிட முடியும்.

தனிப்பட்டவர்களையும் சமுதாயத்தினையும் தொடர்புபடுத்தும் பொழுதே உள வளர்ச்சி, கலாச்சாரம், திறமை ஆகிய மூன்றினதும் கருத்துத் தெளிவு படுகின்றது.

எல்லா மக்களையும் சமமாக மதித்துப் பேணும் சமதர்ம சனநாயக சமுதாயமே இங்கு கருத்திற் கொள்ளப்பட்டது. ஆதலால் சம தர்ம சமுதாய அமைப்பில் கல்வி நோக்கமாவது ஒவ்வொரு ஆண் பிள்ளையும் ஒவ்வொரு பெண் பிள்ளையும் தனிப்பட்ட முறையில் பொது நலனுக்காக உழைக்கும் சக்தியையும் விருப்பத்தையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு உதவுவதோடு, அவளுக்கு அல்லது அவனுக்கு உச்ச அளவில் உடல், உளநற் குணங்களும் வளர்ச்சியடைய உதவுவதே யாகும்.



## 5.2 1972 – 1976 ஐந்தாண்டு திட்டத்தின் கல்வி நோக்கங்கள்.

1972 - 1976 ஐந்தாண்டுத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு கல்விச் செயற்பாடுகளில் பல சீர் திருத்தங்கள் 1972 இல் செயல் படுத்தப்பட்டன. 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளியிடப் பட்ட இலங்கைத் திட்டமிடல் வேலை வாய்ப்பு அமைச்சின் 1972-1976 ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் 96ம் - 98 ம் பக்கங்களிற் கல்வியின் நோக்கங்கள் பற்றி விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. அதில் இந்நாட்டின் பொருளியல் அபிவிருத்திக்கான கல்வியின் நோக்கங்கள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. அதிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்படுகின்றன.

“கல்வியானது மக்களின் பண்பாட்டு அறிவாற்றல்களை விரிவடையச் செய்து பூரண வாழ்வுக்கு வழிகோலுவதாகும்“.

“கல்வி முறையினுலேற்படும் பயிற்சி ஆறறல்கள், விளைவுகள், உளச் சார்புகள், சமூகப் பொருளாதாரச் சூழலுக்கமைய இணைவுறுத்தப் படல் வேண்டும்“.

"கல்விப் பொருளடக்கம், பாடவிதானம், பீடத் திட்டம், பல்வேறு அறிவுத் துறைகளில் பயிற்சி பெறுவோர் தொகைஆதியன, நாட்டின் தொழில் உருவப் பாங்குடன் இசைவுடையதாதல் வேண்டும்".

"வளர்ந்து வரும் சந்ததியினருக்கு, நாட்டு அபிவிருத்திக்கு வேண்டிய அறிவு ஆற்றல்களை வழங்க உதவ வேண்டும்."

"நாட்டின் அபிவிருத்திக்கு எத்தகைய தொழிற்பாடுகள் அவசியமென் பதைத் தெரிந்து கொள்ள உதவ வேண்டும்."

"பொதுவான பள்ளிக் கூடக் கல்வியில் வாழ்க்கைத் தொழிற் கல்வி, நூற்படிப்பு இரண்டினையும் இணைந்து அளித்தல் வேண்டும்."

"மாணவர்களுக்குப் பொதுக் கல்வி அளிப்பதுடன், ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வாழ்க்கைத் தொழில் கல்வியினை கற்பதற்கேற்ற வசதி செய்து கொடுத்தல் வேண்டும். இதன் பொருள் யாதெனில், போதிக்கப்படும் சகல விடயங்களும் மாணவர்கள் பாடசாலையைவிட்டு நீங்கிய பின்னரும் அவனுக்குத் துணை நின்று உதவுதல் வேண்டும் என்பதாம்

**5.3 1979.** கல்வி மீளாய்வுக் குழு அறிக்கையில் கல்வியின் நோக்கங்கள், அரசின் தத்துவங்களாக வெளியிடப்பட்டுள்ளன. திரு. போகொட பிரமரத்தினவின் தலைமையிலான குழுவின் இவ்வறிக்கை "கல்வியில் பொருத்தப்பாட்டினை நோக்கி" எனப் பெயரிடப்பட்டுள்ளது. கல்வியின் நோக்கங்கள் குறிக்கோள்கள் பற்றி அவ்வறிக்கையில் கூறப்பட்டவற்றிலிருந்து சில தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளைக் கீழே தருகின்றோம்.



## கல்வியின் நோக்கம்

தற்காலச் சமூகப் பொருளாதார தேவைகளையும் எதிர்காலத் தேசிய எதிர்பார்ப்புகளையும், நம்முன்னோரின் கலாச்சாரத்துக்குப் பொருத்தப்பாடுடைய விதத்தில் அடைவதற்கான அறிவுத் திறன், அறநெறி உணர்வுகள், உடல் வளர்ச்சி, தொழில், சமூகத் திறன்களையுடைய ஆளுமைத் தன்மையை உருவாக்கி உதவ முக்கியத்துவமுடைய அறிவு திறன், மனப்பாங்குகள் என்பவற்றைப் பெற்றுக் கொள்ள இளைஞர்களுக்கும், வளர்ந்தோருக்கும் பொருத்தமான சந்தர்ப்பங்களையும்-வசதிகளையும் வழங்குவதாகும்.

## கல்விக் குறிக்கோள்கள்

★ உலகின் வரையறுக்கப்பட்ட வளங்களையும், சூழலையும் நன்கு விளங்கிக் கொண்டு அவற்றிலிருந்து வாழ்க்கைத் தேவைகளைப் பெறுவதற்கான அறிவு, திறன், மனப்பாங்கு என்பவற்றை விருத்தி செய்தல்.

★ முழுமையான சுக நலச் செல்வத்துக்கும், மகிழ்ச்சியான வாழ்க்கைக்கும் அவசியமான பழக்க வழக்கங்களை அபிவிருத்தி செய்தல்.

★ சமுதாய வாழ்க்கைக்குத் தேவையான கருத்து விளக்கத்துக்கும் கருத்து வெளியீட்டுக்குமான மொழித் திறனை விருத்தி செய்தல்.

★ இலங்கை மக்களின் சமய, கலாச்சாரங்களை விளங்கிக் கொள்ளுதலும், மதிப்பளித்தலும்.

★ நல்ல ஆக்கமும், அமைதியும், நன்னடத்தையும், செயற்பாட்டுத் தன்மையையும் கொண்ட குடி மக்களை உருவாக்குதல்.

★ கலை, விஞ்ஞானம், இலக்கியம், தொழி நுட்பம் போன்ற துறைகளில் கற்பவர்கள் எதிர் நோக்கும் தடைகளைச் சமாளிப்பதற்குச் சாதகமான விருப்பங்களை வளர்த்தல்.

★ ஏனையவர்களின் சொத்துக்கள், கருத்துக்கள், வாழ்க்கை முறை என்பவற்றுக்கு மதிப்பளித்தல்.

★ மனித சமுதாயத்தினால் எதிர் நோக்கப்படும் பொதுப் பிரச்சனைகளையும் அவை எவ்வாறு நாட்டு மக்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதையும் விளங்கிக் கொள்ளல்

## 5.4 1981 ஆம் ஆண்டு கல்வி வெள்ளை அறிக்கையில் கூறப்பட்ட கல்வியின் நோக்கங்கள்.

அரசினால் வெளியிடப்பட்ட கல்வி வெள்ளை அறிக்கையின் முதலாம் பக்கத்தில் இவ்வாறு காணப்படுகின்றது.

சிபார்சுகளின் அடிப்படை நோக்கங்கள்.

பாடசாலைக் காலத்தை மாற்றியமைத்தல், பாடத் திட்டங்கள், பாடப் புத்தகங்கள், பரீட்சை என்பவற்றை மீள ஒழுங்கமைத்தல் ' ஆகிய மாற்றங்களைப் பொதுக் கல்வித் திட்டத்தில் அறிமுகப் படுத்துவதன் நோக்கம் சமுதாயத்துக்கும்-சமுதாய வேலைகளுக்கும்'' பொருத்தமான திறமைகளை வளர்த்து ஒத்திசைகின்ற வளர்ச்சியை ஏற்படுத்திக் குழந்தையைப் பயனுள்ள முறையில் ஆயத்தப்படுத்துவதாகும். மேற் கூறிய கூற்றிலிருந்து மூன்று தெளிவான நோக்கங்களைக் காணக்கூடியதாகவிருக்கிறது. அவையாவன

1. பிள்ளைகளிடையே ஒத்திசையும் தன்மையில் அபிவிருத்தி ஏற்படுத்துதல்.

2. பிள்ளையைச் சமுதாயத்துக்குப் பொருத்தமானவனாக ஆயத்தம் செய்தல்..

3. பிள்ளையைத் தொழிலுக்காக ஆயத்தம் செய்தல்.

தற்போது இலங்கையின் கல்வி நோக்கங்கள், குறிக்கோள்கள் பற்றிய அறிவைப் பெற்றுள்ளீர்கள். இந்த நோக்கங்களையும் குறிக்கோள்களையும் அடைவதற்குப் பாடசாலைப் பாடவிதானங்களூடாக நிறைவேற்றப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படும் குறிக்கோள் தொடர்பான கீழ்வரும் செயற்பாட்டில் ஈடுபடுவோம்.

**செயற்பாடு II**

முதலாவது பகுதியில் இலங்கை இடைநிலைப் பாடசாலைகளின் பாடங்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியில் அவற்றினால் நிறைவேற்றப்பட வேண்டிய குறிக்கோள்கள் தரப்பட்டுள்ளன. இரண்டாம் பகுதியிலிருந்து பொருத்தமானவற்றைத் தெரிந்து அதனிலக்கத்தை அப்பாடங்களுக்கெதிரில் எழுதுக.

பகுதி 1. பாடங்கள்.

1. சமயம்.
2. முதலாம் மொழி (சிங்களம், தமிழ்)
3. இரண்டாம் மொழி. (ஆங்கிலம்)
4. சமூகக் கல்வி.
5. விஞ்ஞானம்.
6. கணிதம்.
7. சுகாதாரமும் உடல் நலக் கல்வியும்.
8. தொழில் முன்னிலைப் பாடங்கள்.
9. அழகியற் பாடங்கள்.

பகுதி 2. குறிக்கோள்கள்.

1. உலகியல் அறிவைப் பெறுதல்.
2. சுற்றுடலிலுள்ள பொருள்களையும் உயிரிகளையும் விளங்கிக் கொள்ளல்.
3. உபகரணங்களையும் - யந்திரங்களையும் பாவித்தல்
4. நல்லொழுக்கப் பயிற்சி.
5. அளவீடும் தொடர்பும் பற்றிய விளக்கம்.
6. நயத்தற்கான பயிற்சி.
7. வாசிப்பதற்கும் எழுதுவதற்குமான திறன்கள்.
8. சுகதேகியாக வாழ்வதற்கான திறன்களும் மனப் பாங்குகளும்.
9. தொழிற் பயிற்சி.
10. குடி மகனுக்கான பயிற்சி.

சரியான விடைகளை இந்த மொடியூலின் இல.11.0இற் பாருங்கள்.

## செயற்பாடு III

இலங்கையின் கல்வி பற்றித் தரப்பட்ட நான்கு அறிக்கைகளையும் நன்கு கற்றுப் பின்வரும் முடிவுகளுக்கு வர முடியும்.

பெற்ற விளக்கத்தை மீள வலியுறுத்துவதற்காக இப்பயிற்சி தரப்பட்டுள்ளது. அடைப்புக்குள்ளிருக்கும் பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

1. காலத்துக்கேற்ற சமூதாயத் தேவைகளின்படி கல்வியின் நோக்கங்கள் (தீர்மானிக்கப்படுகின்றன தீர்மானிக்கப்படவில்லை)

2. கல்வியலாளர்களின் தேவைக் கேற்பக் கல்வியின் நோக்கங்கள் (தீர்மானிக்கப்படுகின்றன / தீர்மானிக்கப்படவில்லை.)

3. சமுதாயத்தின் தேவைகளுக்கேற்பக் கல்வியின் நோக்கங்கள் ஒரு முறை தீர்மானிக்கப்பட்ட பின் அவை, பிறிதொரு சந்தர்ப்பத்தில் மாற்றத்துக்குட்படுத்தவோ, அதிக கவனம் செலுத்தப்படவோ, குறைவாகக் கவனம் செலுத்தப்படவோ, (இடமில்லை/ இடமுண்டு.)

4. சமுதாயத்தின் புதிய தேவைகளுக்கேற்ற விதத்தில் கல்வி நோக்கங்கள் தோன்றியுள்ளனவெனத் (தெரிகின்றது / தெரியவில்லை.)

சரியான விடைகளுக்கு இந்த மொடியூலின் இல 11.0 இல் பாருங்கள்.

5. எவ்வாறு இருந்தாலும் எல்லாக் காலத்துக்கும் பொதுவான கல்வியின் நோக்கங்களைத் தவிர வேறு நோக்கங்களும்உண்டு எனத் (தெரிகிறது / தெரியவில்லை.)

6. ஒரே நாட்டிலாயினும் கல்வியின் நோக்கங்கள் காலத்துக்குக் காலம் (மாற்றமடைவதில்லை / மாற்றமடைகின்றன.)

## செவ்வை பார்த்தல் 3

இந்தப் பகுதியில் நீங்கள் பெற்ற விளக்கத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக இச் செவ்வைபார்த்தலைச் செய்து பாருங்கள். பின்வரும் கூற்றுக்களைக் கற்று அவை சரியானவையா ! பிழையானவையா என அவற்றுக்கு நேரேயுள்ள கூட்டில் அடையாளமிடுங்கள்.

1. கல்விச் சமுதாயத்தில் மாற்றங்களை ஏற்படுத்தும் முக்கிய காரணியாகும்.. ☐

2. கன்னங்கரா அறிக்கையில் கல்வியின் நோக்கத்தில் நுண்ணறிவு அல்லது ஞான வளர்ச்சியே உள வளர்ச்சி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ☐

3. வளர்ந்து வரும் சந்ததியினரின் அபிவிருத்திக்கான அறிவு, திறன் என்பவற்றை விருத்தி செய்வதே 1972-1976 ஐந்தாண்டுத் திட்டத்தில் கல்வி நோக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ☐

4. இன்றைய இலங்கையில் கல்விக் குறிக்கோள்கள், இலங்கை மக்களின் பாரம்பரிய வழிபாடுகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் என்பவற்றின் விஞ்ஞான ரீதியான அம்சங்களை ஆராய்வதாகும். ☐

5. தேசிய வளர்ச்சியோடு தொடர்புடைய சமதர்ம சனநாயக பாரம்பரியங்களை விளங்கி மதிப்பளித்தல், இன்றைய கல்விக் குறிக்கோளாகக் காணப்படுகின்றது. ☐

சரியான விடைகளுக்கு இந்த மொடியூலின் இல 11.0 இல் பாருங்கள்.

## பகுதி III

## 6.0 பிறநாடுகளின் கல்வியின் நோக்கங்கள்

இந்த மொடியூலின் 2ம் பகுதியில் இலங்கையின் கல்விக் குழுக்களினால் வெளியிடப்பட்ட அறிக்கைகள் நான்கினில் கொடுக்கப்பட்டுள்ள கல்வியின் நோக்கங்கள் ஆராயப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளிலிருந்து கல்வியின் நோக்கங்கள் காலத்துக்குக் காலம் வேறுபடுகின்றன என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். பிறநாடுகள் நான்கின் கல்வியின் நோக்கங்களை இப்பொழுது உற்று நோக்குவோம். அதற்காகத் தெரிவு செய்யப்பட்ட நாடுகள் பின்வருமாறு :

- ★ ஐக்கிய அமெரிக்க நாடுகள்.
- ★ ஐக்கிய இராச்சியம். (பிரித்தானியா)

உங்கள் விடைகளை இந்த மொடியூலின் இல 11.0இல் உள்ள விடைகளுடன் சரிபாருங்கள். பிழையான விடைகளைப் பெற்றீர்களானால் இல. 5.0 பகுதியிலுள்ள இலங்கையின் கல்வி நோககங்கள் பற்றிய விடயங்களைத் திருமபவும் கற்க வேண்டும்.

★ சோவியத் ஒன்றியம்.

★ இந்தியா.

இந்த நாடுகளின் கல்வியின் நோக்கங்களைப் பின்வரும் பந்திகள் தெளிவாக விளக்குவதை அவதானியுங்கள்.

## 6.1 ஐக்கிய அமெரிக்க நாட்டின் கல்வி நோக்கங்கள்

ஐக்கிய அமெரிக்க நாட்டுக் கல்வி நோக்கங்கள் சம்பந்தமாக வெளியிடப்பட்ட நூல்களில் இடைநிலைக் கல்வி மீளாய்வுக் குழுவினால் வெளியிடப்பட்ட "இடைநிலைக் கல்வியின் அடிப்படைத் தத்துவங்கள்" என்னும் நூல் மிகவும் பிரபல்யமாகக் கருத்தப்படுகின்றது* முறைசார் கல்வியின் எல்லா நிலைகளிலும் இந் நூலைப் பிரயோகிக்கலா. இந் நூலிலிருந்து ஒரு பகுதியினை இங்கே நீங்கள் அவதானிக்கலாம்.

இடைநிலைக் கல்வியின் அடிப்படைத் தத்துவங்கள்.

ஜனநாயக நாடொன்றில் பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியிலும் பெறும் கல்வியினூடாக மாணவர்களின் அறிவு, நாட்டங்கள், இலட்சியங்கள், பழக்க வழக்கங்கள் ஆற்றல் முதலியன விருத்தி செய்யப் படல் வேண்டும்.

மேலும் அவர்களுக்கு சமுதாயத்திலடையக் கூடிய நிலையைப் பெற்றுக் கொள்ளச் சந்தர்ப்பமளித்து அவர்களுக்கும், அவர்கள் வாழும் சமுதாயத்துக்கும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பெறுவதற்கு உதவியாகவிருக்க வேண்டும்.

பாடசாலையின் வேலைத் திட்டங்கள் கீழ்வரும் 7 விடயங்களை (பாடத் துறைகளை) உள்ளடக்கியனவாக அமைய வேண்டும். அவையாவன :

* சுகாதாரம்.

சுகாதாரம் சம்பந்தமான அறிவுறுத்தல்களைப் பெறல், சுகாதா பழக்க வழக்கங்களிற் பயிற்சியளித்தல், உடற்கல்வி கல்வி சம்பந்தமான திருப்தியான திட்டங்களை ஒழுங்கு செய்தல்.

வீட்டுக்கும் சமுதாயத்துக்கும் இடையில் ஒத்துழைப்பை விருத்தி செய்தல்.

* உற்பத்தி முறை ஒழுங்குகளைப் பற்றி விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல். தற்போதைய வாழ்க்கை முறையின் தேவைகளைப் பற்றிப் போதிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.

* பயனுள்ள குடும்ப அங்கத்துவம்.

  நெருக்கமான தொடர்புடன் கூடிய, பயனுள்ள குடும்ப அங்கத்துவம் பெறுவதற்கவசியமென குண நலன்களை விருத்தி செய்தல்.

* வாழ்க்கைத் தொழில்.

தனது முன்னேற்றத்துக்கு வாய்ப்பளித்துச் சமூகத்துக்கும் தனக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்திச் சமூகத்துக்குத் சேவையளித்துத் தனக்கும் தன்னில் தங்கியிருப்பவர்களுக்கும் ஒரு திருப்தியான வாழ்க்கையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தொழிலைத் தேர்ந்தெடுக்க உதவியளித்தல்.

★ சமூகக் கல்வி.

அயல் மக்கள், நகர மக்கள், பிரதேச மக்கள் போன்ற நாட்டு மக்கள் எல்லோர்கள் மத்தியிலும் இணக்கமான முறையில் வாழ்வதற்குரிய நற்பண்புகளைப் பெற்றுக் கொடுத்தல்.

★ ஓய்வு நேரம்

ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வகையில் கழித்தலும் ஏற்றவுடல் உள செயற்பாடுகள் மூலம் ஆளுமை விருத்திச் சந்தர்ப்பம் பெற்றுக் கொடுத்தலும்.

★ நல்லொழுக்கம்.

அற முறையிலான நல்லொழுக்கப் பண்புகளை விருத்தி செய்தல்.

மேலே கூறியவற்றைத் தவிரக் கல்வித் தத்துவங்களுக்கான இக்குழு "அமெரிக்க நாயகத்தின் கல்வி எதிர்பார்ப்புக்கள்" என்ற இன்னொரு வெளியீட்டையும் வெளியிட்டுள்ளது.

இதில் மக்களின் பொறுப்புக்கள் நான்கு பிரிவுகளாக விளக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகளும் - அவற்றுக்கான உதாரணங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

☆ உள நிறைவோடு தொடர்புடைய நோக்கங்கள். விசாரணையில் ஈடுபடும் உள வளர்ச்சி, கற்றலில் ஆழமான விருப்பத்தை வளர்த்தல், குண நலங்களின் விருத்தி.

★ மனிதத் தொடர்புகள் பற்றிய நோக்கங்கள்-மனிதத் தன்மையை மதித்துக் கௌரவித்தல், சமுதாய வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்த நிலையைப் பெறல், சனநாயக சூழலைக் குடும்பங்களில் ஏற்படுத்தல்.

★ பொருளாதாரத் திறன்களோடு தொடர்பான நோக்கங்கள். தொழிலில் திறமை பெறுதல், தெரிவு செய்த தொழிலில் திறமையுடன் திருப்திகரமாக ஈடுபடல், திறமையுடன் செலவினங்களை நிர்வகித்தல், புத்திசாலித்தனமாக நுகர்வினை மேற்கொள்ளல்.

★ சமூகக் கடமைகளுடன் தொடர்புடைய நோக்கங்கள்-பட்ச பாதமின்றி நடு நிலைமை வகித்தல், தேசியக் செல்வங்களைப் பாதுகாத்தல்.

இக்கல்வி ஆய்வுக் குழு இடை நிலைப் பாடசாலைகளில் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களைப் பத்தாக வகைப்படுத்தியுள்ளது. அவையாவும் கல்விச் செயறபாட்டில் நிறைவேற்றப்பட வேண்டிய இளம் சந்ததியினரின் தேவைகளெனவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவன :

★ பொருளாதாரத்தில் தகைமைகளையும் திறமைகளையும் அடைவதற்கு அவசியமான திறன்களையும் மனப்பாங்குகளையும் அபிவிருத்தி செய்தல்.

- ★ அவசியமாகச் சுக நலத்தையும், உடல் நலத்தையும் பேணி வளர்த்தல்.

- ★ சனநாயகச் சமுதாய அமைப்பில் குடி மக்களின் பொறுப்புக் களையும் கடமைகளையும் உரிமைகளையும் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்ளல்.

- ★ குடும்ப வாழ்க்கையினை வெற்றிகரமாக நடத்துவதற்குத் தேவை யானவற்றை விளங்கிக் கொள்ளல்.

- ★ பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும்போதும் அவற்றை நுகரும்போதும் புத்திசாலித்தனமான நுகர்வோ ராகச் செயற்படுதல்.

- ★ இன்றைய உலகில் தேவையான விஞ்ஞான அறிவையும் விஞ் ஞான முறைகளையும் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள் ளல்.

- ★ இலக்கியம், கலைகள், சங்கீதம், இயற்கை அழகு ஆகியவற்றை இரசித்து நயக்கும் திறனை விருத்தி செய்து கொள்ளல்.

- ★ தனக்கும் சமுதாயத்துக்கும் பயனுள்ள விதத்தில் ஓய்வு நேரத் தைக் கழிக்கும் திறனை விருத்தி செய்தல்.

- ★ தர்க்க ரீதியாகச் சிந்திப்பதற்கும் கருத்துக்களை வெளியிடவும் திறன்களை விருத்தி செய்து கொள்ளல்.

- ★ உயர்ந்த நல்லொழுக்கப் பண்பும் வளர்ச்சியினைப் பெற்றுக் கொள்ளல்.

## 6.2 ஐக்கிய இராச்சியத்தின் கல்வி நோக்கங்கள்

ஆரம்பக் கல்வி பற்றிய பிளௌடொன் அறிக்கையிலிருந்து கீழ் வரும் தெரிந்தெடுக்கப்பட்ட பகுதிகளைக் கற்பதன் மூலம் ஐக்கிய ராச்சியத்தின் கல்வியின் நோக்கங்களை அறிந்து கொள்ளலாம்.

மாற்றமடைந்து வரும்சூழலுக்கேற்பத் தற்காலச் சமுதாயத்தில் பிள்ளைகளும் வளர்ந்தோரும் தம்மை மாற்றியமைத்துக் கொள்ளும் திறனை அவசியமாக வளர்த்துக் கொள்ளுதல். அத்துடன், சகோதர நாட்டு மக்களின் உணர்வுகளை அனுதாபத்துடன் அணுகி விளங்கிக் கொள்வதுடன் அவர்களிடையே காணப்படும் வேறுபாடுகளை ஏற்றுக் கொண்டு அதனை மதித்து நடப்பதற்கும் அவசியம் பழகிக் கொள்ளுதலுமாகும்.

பலம் வாய்ந்த தாக்கத்தைத் தாங்கிக் கொள்ளும் திறனையும் சுய சிந்தனை மூலம் செயற்படுவதற்கான திறனையும் அவசியமாக வளர்த் துக் கொள்ளுதல் மேலும் உணர்வுகளும், நுண்ணறிவும் எல்லை கடந்து செல்லாது சம நிலை வளர்ச்சியை அவசியம் பெறுதல்.

வயது வந்தோர் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கும் கற்பித்தலுக் கும் ஆயத்தமாக இருத்தல் வேண்டும். விசேடமாக மாற்றமடையும் பொருளாதார நிலைமைக்கேற்ப அவசியமான புதிய திறமைகளை விருத்தி செய்தல் மிக முக்கியமானது. சனநாயக சமுதாயத்தில் தனிப்பட்டவர்களின் பொறுப்புக்கள், கடமைகள் என்பவற்றுடன் உரி மைகளையும் பற்றிய சிறந்த விளக்கத்தை அவசியமாகப் பெற்றி ருத்தல்.

# 6.3 சோவியத் ருஷியாவின் கல்வி நோக்கங்கள்

நீங்கள் இதுவரை ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் கல்வி நோக்கங்களைக் கற்றுள்ளீர்கள். இப்போது பொதுவுடைமை நாடான சோவியத் ருஷியாவின் கல்வி நோக்கங்கள் யாவையென ஆராய்வது பயனுடையதாகவிருக்கும்.

சோவியத் ருஷியாவின் கல்வி முறையின் எதிர்பார்ப்புகளை விளங்கிக் கொள்ளுதற்கு வி. ஐ. லெனினின் கீழ்வரும் கூற்றுக்கள் உதவியாக அமையும்.

- பொதுவுடைமைச் சமுதாயமொன்றை உருவாக்குதல் இளம் சந்ததியினரின் பங்களிப்பிலேயே தங்கியுள்ளது எனச் சுட்டிக் காட்டப்பட்டது.
- நீங்கள் பொதுவுடைமைச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுவிட்டது. அப்பின்னணியின் அடிப்படையில் இளம் சந்ததியினர் பொதுவுடைமைச் சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்..
- நீங்கள் பொதுவுடைமை வாதிகளாக ஆவதற்குரிய பயிற்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அடிப்படையான அறிவினையும் சுயமாகப் பொதுவுடைமைக் கருத்துக்களையும் விருத்தி செய்வதன் மூலம் இளம் சந்ததியினரைக் கற்றவர்களாக்குவதற்கு எங்கள் பாடசாலைகள் முயற்சி செய்ய வேண்டும்.
- எதிர்காலத்தில் முன்மாதிரியான சமுதாயத்தை உருவாக்குவதற்கு உழைக்கும் இளம் தொழிலாளர்களை உருவாக்கும் செயலோடு கல்வியும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.
- இளைஞர்களுக்கான சகல விதமான பயிற்சிகள் கல்விச் செயற்பாடுகள் கற்பித்தல் யாவும் பொதுவுடைமை அறநெறிகளை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் சோவியத் பொதுவுடைமைக் கட்சியின் மத்திய நிர்வாகக் குழுவின் வெளியீட்டில் உள்ள தத்துவங்கள் முக்கியமானவை.

பாடசாலை மாணவர்களிடம் கீழே தரப்பட்ட குண நலன்களை வளர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அறிவிலும் தொழிலிலும் விருப்பம் ஏற்படுத்தல்.
தொழிலாளர்களை மதித்தல்.
பொதுவுடைமை க் கருத்துக்களை விருத்தி செய்தல்.
பொதுவுடைமை அறநெறி, குணவியல்புகளை வளர்த்தல்.
நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அதிக பற்றுடையவராகவிருத்தல்.
சர்வதேசத் தொழிலாளர் நலன்களின் அக்கறை காட்டுதல்.

சோவியத் நாட்டுக் கல்வியின் பங்களிப்பு பொதுவுடைமைச் சமுதாயம் ஒன்றை உருவாக்குவதற்கு உதவுவதாகும். மாணவர்களின் பௌதிகச் சூழலை உருவாக்குதல், பல்வேறுபட்ட அறிவுத் துறைகளை வளம்படுத்துதல். சமுதாயத்துக்குப் பயனுள்ள வேலைகளைச் செய்வதற்கு ஆயத்தப்படுத்துதல்.

இதிலிருந்து தெளிவாக எதிர்பார்க்கப்படுவது யாதெனில் பொதுடைமைச் சமுதாயத்தின் கல்வி முறையானது பொதுவுடைமைச் சமுதாயமொன்றினைக் கட்டியெழுப்புவதற்காக வழி நடத்தப்படுகின்றதென்பதாகும்.

# 6.4 இந்தியாவின் கல்வியின் நோக்கங்கள்

இதுவரை கவனித்த மூன்று நாடுகளாவன ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், சோவியத் ருஷ்யா ஆகிய அபிவிருத்தியடைந்த நாடுகளாகும். அவை வளமுள்ள நாடுகள் என்பதனால் கல்வியில் உயர்ந்த நோக்கங்களைக் கொண்டிருக்கின்றன என விளங்கிக் கொள்ள முடிகிறது.

ஆனால் உலகின் பெரும்பாலான நாடுகள் அபிவிருத்தியடைந்து வரும் வறுமையான நாடுகளாகும். மூன்றும் உலக நாடுகளைச் சார்ந்த இந்நாடுகள் குறிப்பிடத்தக்க காலமாக வெளிநாட்டுச் செல்வாக்குக்கு உட்பட்டவையாக இருந்தவை. அண்மைக் காலத்தில் சுதந்திரம் பெற்றுப் பொருளாதாரக் கஸ்டங்களுக்கூடாக வளர்ச்சியடைய முயற்சிக்கின்றன.

இந்த நாடுகளின் கல்வி நோக்கங்கள் வளர்ச்சியடைந்த நாடுகளை விடப் பெருமளவில் மாறுபட்டவையாகும். இந்நாடுகள் கல்வியின் மூலம் தமது நாட்டின் சமூக, அரசியல், பொருளாதார, கலாச்சாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சிக்கின்றன.

இந்தியாவின் கல்வி நோக்கங்களை நாம் ஆராய்வது மிகப் பயன் உள்ளதாகும். அந்நாட்டின் புகழ் பெற்ற கல்வியிலாளரான டி. எஸ். கொத்தாரி யுனெஸ்கோவின் வெளியீடான “மாற்றமடையும் கல்வி“ என்ற வெளியீட்டில் “அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் கல்வி முன்னுரிமைகள்“ என்ற ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளார். அக்கட்டுரையிலிருந்து இந்தியாவின் கல்வி நோக்கங்கள் மிகச் சுருக்கமாகக் கீழே தரப்பட்டுள்ளன.

- எல்லாப் பிள்ளைகளுக்கும் இலவச ஆரம்பக்கல்வி வழங்கல்.
- இடையிற் கல்வியை நிறுத்திய பாடசாலையிலிருந்து விலகும் மாணவர்களின் தொகையைக் குறைத்தலும், தமது இளம் வயதில் கல்வி பெற முடியாதவர்களுக்கு கல்வியளித்தலும்.
- இளைஞர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் அபிவிருத்தியினையும் அனுபவத்தையும் பெறும் விதத்தில் கல்வியின் பாட விடயங்களை ஒழுங்கமைத்தல்.
- விஞ்ஞானக் கல்வியையும், அதற்குதவியாக அமையும் கணிதத்தையும் விருத்தி செய்தல்.
- வேலை அனுபவத்தையும், கல்வியையும் இணைத்தல்.
- சர்வதேச மட்டத்திற்குகந்த உயர் கல்வி வசதிகளை உயர்ந்த கல்வி நிறுவனங்களுடாக வழங்கல்.
- பரிசோதனைகளுக்குச் சந்தர்ப்பங்களை ஆக்கிக் கொடுத்தலும் அவைகளைக் கைத் தொழில், விவசாயம் ஆகிய துறைகளோடு இயைபு படுத்தலும்.
- நாட்டுக்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளரை வழங்குதல்.

**செயற்பாடு 4**

ஐக்கிய அமெரிக்க் நாடு, ஐக்கிய இராச்சியம், இந்தியா, சோவியத் ருஷியா ஆகிய நாடுகளின் கல்வி நோக்கங்களைக் கற்றறிந்த நீங்கள் இப்பொழுது சில முடிவுகளை எடுக்க முயற்சி செய்தல் வேண்டும். அடைப்புக்குள் உள்ள விடைகளுள் சரியானதைத் தவிர்த்து ஏனை வைகளை வெட்டி விடுக

1. (ஐக்கிய அமெரிக்க நாட்டு/ஐக்கிய இராச்சியத்துக்கு/சோவியத் ரஷ்யாவின்) கல்வி நோக்கங்களில் பொருளாதாரத் திறமை களையும் சனநாயகச் சமுதாயத் தொடர்புகளையும் வளர்ப்பது முக்கிய அம்சமாக இடம் பெறுகின்றது.

2. (ஐக்கிய அமெரிக்க/இந்தியா/சோவியத் ருஷ்யாவின் கல்வி நோக்கங்களில் பொதுவுடையைச் சமுதாயத்தை உருவாக்கு வதற்கும் தொழில் மகத்துவத்தைப் பேணுவதற்கு முக்கிய இடம் வழங்கப் பட்டுள்ளது.

3. (ஐக்கிய அமெரிக்க நாடு / ஐக்கிய இராச்சியம் / சோவியத ருஸ்யா) வின் கல்வி நோக்கங்களில் மாற்றமடையும் சூழலுக் கேற்பத் திறனையும் தெளிவான தர்க்க ரீதியான சிந்தனையும் வளர்த்தல் முக்கிய அம்சமாக இடம் பெறுகிறது.

4. ஐக்கிய அமெரிக்க நாடு, ஐக்கிய இராச்சியம், சோவியத ருஸ்யா, இந்தியா ஆகிய நாடுகளின் கல்வி நோக்கங்கள் எல்லா வகைகளிலும் (ஒத்தன ஒவ்வாதன)

5. ஒவ்வொரு நாடும் ஏற்றுக் கொண்டுள்ள அரசியல் தத்துவங்கள் அவ்வந் நாட்டின் கல்வி நோக்கங்களில் (தாக்கத்தை ஏற்படுத்து கின்றன / அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை.)

6. கல்வியின் நோக்கங்கள் நாட்டுக்கு நாடு (வேறுபடுகின்றன, வேறுபடவில்லை.)

> சரியான விடைகளுக்கு இந்த மொடியூலின் இல 11.0 இல் பாருங்கள்.

**செவ்வைபார்த்தல் IV**

மேலேரும் கல்வியின் நோக்கங்களை நீங்கள் கற்றுள்ள நாடுகளின் கல்வி நோக்கங்களோடு தொடர்பு படுத்தி அறிந்து கொள்ள முயலுங் கள். விடையளிக்கும்போது ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐக்கியராச்சி யம், சோவியத் ருஸ்யா, இந்தியா ஆகிய நாடுகளில் பொருத்தமான ஒன்றைத் தெரிவு செய்து நோக்கங்களுக்கெதிரே எழுதுங்கள்.

> சரியான விடைகள் மொடியூலில் இல. 11.0ல் உள்ளன. உங்கள் விடைகளை அவற்றுடன் ஒப்பிட் டுப் பாருங்கள்.

1. தனிப்பட்ட ஒருவர் குடும்பத்தில் அக்கறையுள்ள அங்கத்து வரா கச் செயற்படுவதற்குத் தேவையான நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல். ............

2. சனநாயக சமுதாய அங்கத்தவர் ஒருவர் சமுதாயத்துக்கு ஆற்ற வேண்டிய பல கடமைகள் உண்டு என்பதை விளங்கிக் கொள்ளுதல். ............

3. தேசிய வளங்களைப் பாதுகாத்தல் ............

4. விவசாயத் தொழிலுடனும் கைத்தொழிலுடனும் கல்வியை ஒன்றிணைத்தல். ............

5. சனநாயக சமுதாயத்திலுள்ள ஒரு பிரசையின் உரிமைகளையும் கடமைகளையும் விளங்கிக் கொள்ளல். ............

6. தெளிவானதும் தர்க்கரீதியானதுமான சிந்தனையை வளர்த்தல். ............

7. நாட்டுக்குத் தேவையான பயிற்சி பெற்ற தொழிலாளரை வழங்குதல். ............

8. மாறுபடும் சூழலுக்கேற்பப் பொருத்தப்பாடு அடையும் திறனை விருத்தி செய்தல். ............

9. தொழிலில் ஆர்வம் காட்டுவதுபோல் தொழிலாளர் மீதும் அக்கறை காட்டுதல். ...........

10. பொருளாதாரத்தில் உச்சப் பயன்பாட்டைப் பெறும் திறனை விருத்தி செய்தல். ...........

11. பொதுவுடைமைச் சமுதாயத்தை உருவாக்குதல் ...........

12. இடையில் பாடசாலையிலிருந்து வெளியேறுபவர்களின் தொகையினைக் குறைத்தல். ...........

## 7.0 பொழிப்பு

இம் மொடியூலில் கூறப்பட்ட விடயங்களைச் சுருக்கமாக ஆராய்வோம். எல்லா நாடுகளின் கல்வி முறைகளிலும் நோக்கங்களும் குறிக்கோள்களும் காணப்படுகின்றன. கல்வி முறைகளில் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு குறிக்கோள்கள் வகுக்கப்படுகின்றன. இக்குறிக்கோள்களை மையமாகக் கொண்டு பாட விதானங்கள் அமைக்கப்படுகின்றன. பாடவிதானத்துக்கான குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்ட பாட அலகுகளுக்கு விசேட குறிக்கோள்கள் வகுக்கப்படுகின்றன. கற்றலில் பாட அலகுக்கான விசேட குறிக்கோள்கள் மாணவர்களின் தொழிற்பாடுகளில் அல்லது மாணவர்களின் நடத்தையில் மாற்றம் ஏற்படும் விதமாக அமைந்திருத்தல் வேண்டும் என கல்வித் தத்துவவியலாளர்கள் கல்வி நோக்கங்களின் தன்மைகளை விளக்கியுள்ளனர்.

இலங்கை, இந்தியா போன்ற வளர்முக நாடுகளிலும் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கியராச்சியம், சோவியத் ருஸ்யா, போன்ற வளர்ச்சியடைந்துள்ள நாடுகளிலும் கல்வி முறையினூல் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் அரசின் கொள்கையாகக் கருதப்படுகின்றன. மேலே கூறியவற்றிலிருந்து சமுதாயத்தின் தேவைகளுக்கேற்ப காலத்துக்குக் காலம், நாட்டுக்கு நாடு கல்வியின் நோக்கங்கள் மாறுபாடு அடைகின்றனவென்பது தெளிவாகிறது. இதுவரை கற்றவற்றை நீங்கள் எவ்வளவுக்கு விளங்கிக் கொண்டுள்ளீர்களென்பதை நீங்களே மதிப்பீடு செய்வதற்குப் பின்வரும் "பிற் சோதனை" உதவியாக அமையும்.

## 8.0 பிற்சோதனை

அடைப்புக்குள்ளிருக்கும் பதங்கலிருந்து இடைவெளியை நிரப்பப் பொருத்தமான பதத்தைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுங்கள்.

1. கல்வியின் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காகப் பல .................................. நிறைவேற்றப்படல் வேண்டும் (அடைவுகள்/தேவைகள்/உறுதிப்பாடுகள்/குறிக்கோள்கள்.)

2. கல்வியின் .................................. நிறைவேற்றிக் கொள்வதற்கு நீண்டகாலமெடுக்கும் (குறிக்கோள்கள்/விசேட குறிக்கோள்கள்/நோக்கங்கள்/வசதிகள்.)

3. விசேட குறிக் கோள்கள் என்பது மாணவர்களின் நடத்தையில் .................................. மாற்றங்களை ஏற்படுத்துவதாகும். (தேர்ந்தெடுத்த/குறிக்கப்பட்ட/தேர்ந்தெடுக்கப்படாத பல்வேறு.)

4. ஆர். எஸ். பீற்றர்ஸ்........................ஏதாவதொன்றை வழங்குவதே கல்வியின் நோக்கமாக இருக்க வேண்டுமெனக் கூறுகின்றார். (ஆக்கமுள்ள/மனப்பாங்கில்/நயத்தலில்/பய னுள்ள.)

5. 1943 கல்வி விசேட ஆணைக் குழு............................ விருத்தியே கல்வியின் முக்கிய நோக்கமெனக் கருதியது (நடத்தை/கலாச்சார/பொருளாதார/உள.)

6. போகொட பிரேமரத்தின குழு, சமுதாயத் தொழில்.............. ............................விருத்தியே கல்வியின் தற்கால நோக்கமெனக் கூறியது, (திறன்களின்/மனப்பாங்குகளின்/தகுதிகளின்/பண்புகளின்.)

7. கல்வியின் குறிக்கோள்களை நிறைவு செய்ய........................ பெரிதும் உதவுகிறது. (நோக்கம்/பாட விதானம்/கற்பித்தல்/உபகரணம்/பத்திரிகை.)

8. அமெரிக்காவினிடைநிலைக் கல்வி ஆணைக் குழு பாடசாலை வேலைத் திட்டத்தில் இருக்க வேண்டிய ஏழு அம்சங்களில் ..............................ஒரு அம்சமாகுமெனக் கூறியது. (சமயக் கல்வி/ஆளுமை விருத்தி/சமுதாயக் கல்வி/மெய்வல்லு னர்நிகழ்ச்சி.)

9. கல்வி முறையூடாக அரசியல் தத்துவத்தை உறுதிப்படுத்தல் வேண்டுமென்னும் கொள்கையை வலியுறுத்தும் நாடு........... ........................................ஆகும். (ஐக்கிய அமெரிக்கா/சோவியத் ருஸ்ய/இந்தியா/இலங்கை.)

10. வரையறுக்கப்பட்ட வளங்களைச் சிக்கனமான முறையில் பயன் படுத்துவதை மையமாகக் கொண்டு கல்வி நோக்கங்களை அமைத்த நாடு................ ஆகும். (ஐக்கிய அமெரிக்கா/சோவியத் ருஸ்யா/இந்தியா/ஐக்கிய ராச்சியம்)

மொடியூலின் இல 11.0 இல் தரப்பட்ட சரியான விடைகளுடன் உங்கள் விடைகளை ஒப்பிட்டுப் பாருங்கள்.. 7க்குக் கூடிய சரி யான விடைகளிருந்தால் நீங்கள் திருப்தியடையலாம்.

**இப்போது நீங்கள் இம்மொடியூலைக் கற்று முடித்துள்ளீர்கள். இதனை எவ்வளவு தூரம் வெற்றி கரமாகக் கற்று முடித்துள்ளீர்கள் என்பதனை நீங்கள் சமர்ப்பிக்கும் ஒப்படை மூலம் அறியப்படும். அவ்வாறான ஒப்படை கீழே தரப்படுகின்றது. இதற்கான விடையை எழுதித் தொலைக்கல்விப் பிரதேச நிலையத்தில் கையளியுங்கள்.**

## 9.0 ஒப்படைகள்

**"கற்பித்தலின் போது" கற்பிப்பது என்ன?**

யாருக்குக் கற்பிப்பது? எவ்வாறு நடைபெறுகின்றது? போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதன் மூலம், "ஆசிரியர் ஒரு வருக்கு தொழில்சார்கல்வியை கற்பிக்கும் திறன் பெறப் படுகின்றது" எனும் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் ஒருவருக்கு தொழில்சார்கல்வியின் முக்கியத்துவத்தை விளக்குக.

(உமது விடையினை 250 சொற்களுக்குக் குறையாமல் தருக.)

# 10.0 கலைச்சொல் விளக்கம்

நோக்கங்கள் : கல்வியின் பொதுவான எதிர்பார்ப்புக்கள்.

குறிக் கோள்கள : பாடவிதானத்தோடு தொடர்புடைய எதிர் பார்ப்புக்கள்.

விசேட குறிக் கோள்கள் : பாட அலகினால் அடைய வேண்டிய எதிர் பார்ப்புக்கள்.

நடத்தை சம்பந்தமான குறிக் கோள்கள்: குறிப்பிட்ட நடத்தை மாற்றங்களிலிருந்து அறியப்படுவது.

நியமங்கள் : அளவீட்டுக்கான தரங்கள்.

அறிதலாட்சி : அறிவு சம்பந்தப்பட்டது.

ஒருங்கிணைத்தல பல்வேறு விடயங்களை ஒன்று சேர்த்தல்.

# 11.0 விடைகள்

## முற்சோதனை

1 — 2.
2 — 3.

## செவ்வைபார்த்தல் 01.

1 — 3.
2 — 1.
3 — 2.
4 — 2.
5 — 1.
6 — 3.
7 — 3.
8 — 2.
9 — 1.
10 — 3.

## செவ்வைபார்த்தல் 02.

அ. 1 — ஆம்.
2 — ஆம்.
3 — இல்லை.

ஆ. 4 — ஆம்.
5 — ஆம்.
6 — ஆம்.
7 — ஆம்.
8 — ஆம்.

இ. 9 — இல்லை.
10 — இல்லை.
11 — ஆம்.
12 — ஆம்.
13 — இல்லை.
14 — ஆம்.
15 — ஆம்.
16 — ஆம்.
18 — இல்லை.
19 — ஆம்.
20 — இல்லை.
21 — ஆம்.
22 — ஆம்.
23 — இல்லை.
24 — ஆம்.
25 — ஆம்.

## செயற்பாடு 2

1 — 4.
2 — 7.
3 — 1.
4 — 10.
5 — 2.
6 — 5.
7 — 8.
8 — 3.
9 — 6.

## பிற்சோதனை

1. - குறிக்கோள்கள்
2. - நோக்கங்கள்
3. - குறிக்கப்பட்ட
4. - பயனுள்ள
5. - உள
6. - திறன்களின்
7. - பாடவிதானம்
8. - சமுதாயக் கல்வி
9. - சோவியத் ரஷ்யா
10. - இந்தயா

## செயற்பாடு 3

1. தீர்மானிக்கலாம்.
2. தீர்மானிக்க முடியாது.
3. இடமுண்டு.
4. காட்டுகின்றது.
5. காட்டுகின்றது.
6. வித்தியாசப்படுகிறது.

## செவ்வைபார்த்தல் 03.

1. சரி.
2. சரி.
3. சரி.
4. பிழை
5. சரி.

## செயற்பாடு 4

1. ஐக்கிய அமெரிக்க நாடுகள்.
2. சோவியத் ருஷ்யா.
3. ஐக்கியராச்சியம்.
4. ஒவ்வாதது.
5. தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.
6. வேறுபடுகின்றன.

## செவ்வைபார்த்தல் 04.

1. ஐக்கிய அமெரிக்க நாடுகள்.
2. ஐக்கியராச்சியம்.
3. ஐக்கிய அமெரிக்க நாடுகள்.
4. சோவியத் ருஷ்யா.
5. ஐக்கிய அமெரிக்க நாடுகள்.
6. ஐக்கிய அமெரிக்க நாடுகள்
7. இந்தியா.
8. ஐக்கியராச்சியம்.
9. சோவியத் ருஸ்யா.
10. ஐக்கிய அமெரிக்க நாடுகள்.
11. சோவியத் ருஸ்யா.
12. இந்தியாா.

குறிப்பு

ஆசிரியர் தொலைக் கல்விப் பாடநெறி

OFFSET BY THE PACIFIC PRESS (PVT) LTD.